<u>**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**</u>

DVC.No.09/2025

தேதி: 05.02.2026

<u>**அ.சா.1– வினுதா க/பெ விஸ்வநாதன்**</u>

<u>**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

1. நான் என்ன படித்துள்ளேன் D.Ted., படித்துள்ளேன். நான் தற்போது லலிதா நகைக்கடையில் வேலை செய்து வருகிறேன். நான் தாக்கல் முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்ன சொல்லியுள்ளேன் என்று எனக்குத் தெரியும். எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 08.11.2009 ல் நடைபெற்றது. லவ் பண்ணி அரேஞ்சு பண்ணி திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்னிட்டு எங்கு வசித்து வந்தீர்கள் என்றால் கணவர் வீட்டில் கூட்டுகுடும்பமாக வசித்து வந்தோம்.

2. மாமியார், மாமனார் அப்போது பேசினார்கள். நானும், எதிர்மனுதாரரும் கொஞ்ச நாட்கள் சந்தோசமாக தான் இருந்து வந்தோம். குழந்தை எப்போது பிறந்தது என்றால் கல்யாணம் ஆகி 3 ஆண்டுகள் கழித்து 2013 ம் ஆண்டு பிறந்தது. பிரசவத்தை எதிர்மனுதாரர் தான் பார்த்தார் என்றால் இல்லை முதல் பிரசவம் என்பதால் அம்மா வீட்டில் பார்த்துக்கொண்டார்கள். 3 பிரசவமும் அம்மா வீட்டில் தான் பார்த்தார்கள். குழந்தைகளை எதிர்மனுதாரர் பார்த்துக்கொண்டார் என்றால் இரண்டு குழந்தைகள் இறந்துவிட்டது எங்களுக்குள் பிரச்சனை வரும் வரை பார்த்துக்கொண்டார்.

3. இந்த வழக்கு எதற்காக போடப்பட்டுள்ளது என்றால் எனது கணவர் வேறு பெண்ணுடன் தொடர்பு கொண்டு நகை, பணம் வேண்டும் என்று சித்திரவதை செய்தார். ஆண் வாரிசு வேண்டுமென்று சித்திரவதை செய்தார்.

**எதிர்மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு வாய்தா ஒத்தி வைக்கப்படுகிறது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கைெயழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.09 10:50:26 +05'30'

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.